# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

**கூட்ட எண்.36/2018** **நாள். 31.10.2018**

## தனி அலுவலர் அவர்களின் அக்டோபர் 2018 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்

31.10.2018ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் அக்டோபர் 2018 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | அக்டோபர் 2018 | 0 | 0 | 0 | 0 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அக்டோபர் மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கற்பட்டு அவர்களின் 08.10.2018ம் தேதிய ஆய்வு கூட்ட நடவடிக்கைகள் ந.க.எண.4239/2018/அ4 –ல் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பூங்காக்கள், விளையாட்டு திடல் மற்றும் திரவிடம் முதலியவற்றை விடுதலின்றி பட்டியலிட்டு தமிழ்நாடு பூங்கா, விளையாடும் இடம் மற்றும் திரவிடம் ( பாதுக்காத்தல், முறைப்படுத்துதல்) சட்டம் 1959ன்கீழ் பிரசுராம் செய்ய திட்ட பிரேரணை அனுப்ப கோரப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அட்டவனையில் கண்டுள்ள சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் மற்றும் நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் மூலமாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பூங்கா, திரவிடம் மற்றும் சிறுவர் விளையாடும் இடம் ஆகிய இடங்களை தமிழ்நாடு பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் பாதுபாப்பு சட்டம் 1959 பிரிவு 4ன் கீழ் பிரசுரம் செய்ய அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானம் மற்றும் திறவிடம் பாதுக்காக்கும் சட்டம் 1959ன் கீழ் நகராட்சியினால் கண்டறியப்பட்ட 5 எண்ணிக்கை கொண்ட பூங்கா மற்றும் சிறுவர் விளையாடும் இடங்களை எதிர்காலத்தில் எவ்வித ஆக்கிரமிப்புகள் செய்வதை தடுக்கும் வகையிலும், பூங்கா மற்றும் விளையாடும் இடங்களில் தனியார் / பொது கட்டிடம் ஏற்படாமல் தடுக்கவும் மற்றும் இதர நிறுவனங்களுக்கு பயன்படுத்தாமல் இருக்கவும், பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் அட்டவனையில் கண்டுள்ள இடங்களை அரசிதழில் வெளியீடு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம். ( ந.க.எண். 606 /2018/எப்1 )

**<u>பொருள் எண். 4</u>**

2018–19ம் ஆண்டிற்கு பொது சுகாதார பிரிவு பயன்பாட்டிற்கு தேவையான தளவாட பொருட்கள் சப்ளை செய்யும் பணிக்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு கிருத்திகா அசோசிடேஸ் நிறுவனத்தின் மூலம் பொருட்கள் சப்ளை செய்யப்பட்டு வந்நது. மேற்படி பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 9/2018ம் மாதத்தோடு முடிந்து விட்டதால், 10/2018 முதல் 3/2019 வரை பொது சுகாதார விரிவிற்கு பொருட்கள் வாங்க வேண்டியுள்ளதால், மேற்படி நிறுவனத்தின் மூலம் அதே விலை விகிதத்தில் பொருட்கள் சப்ளை செய்யவும், அதற்கான தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**<u>பொருள் எண். 5</u>**

10.10.2018ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

அனகாபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தனியார் பங்களிப்பு மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக மையங்கள் அமைத்து குறைந்த விலையில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் வழங்க ஏதுவாக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் தனியார் பங்களிப்பின் கீழ் (Public Private Partnership mode) பாதுகாக்கப்பட்ட குடிநீர் மையங்கள் ஏற்படுத்துதல் பணி

| வ.எண் | வார்டு எண் | இடத்தின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் / விலை விகிதம் | ஒப்பந்ததாரர் பெயர் / விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | சாமுண்டீஸ்வரி நகர் | மெசஸ்.தாரனா இன்பெராஸ்டக்சர் பிராஜக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட். 20 லிட்டருக்கு ரூ.6.90/– | மெசஸ்.வாட்டர் எல்த் இந்தியா பிரைவேட் லிமிடெட். 20 லிட்டருக்கு ரூ.10.00/– நகராட்சி |
| 2 | 2 | கௌரி அவென்யூ | | |
| 3 | 7 | அண்ணா நகர் மெயின் ரோடு | | |
| 4 | 8 | மூர்த்தி நகர் | | |
| 5 | 9 | பஜார் தெரு (சமுதாய கூடம் அருகில்) | | |
| 6 | 12 | சண்முக முதலி தெரு (கல்மடுவு அருகில்) | | |
| 7 | 14 | அயோத்தியம்மன் கோயில் தெரு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 15 | காமராஜபுரம் (மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி) | நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.1.00/– | பங்களிப்பு தொகை ரூ.ஏதுமில்லை. |
| 9 | 17 | கே.கே.ஷா தெரு | | |
| 10 | 18 | அனகாபுத்தூர் பஸ் நிலையம் | | |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதியளிக்கலாம்.
2.குறைந்த ஒப்பந்தப்புள்ளி மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை வழங்க இசைவு தெரிவித்துள்ள மெசஸ்.தாரனா இன்பெராஸ்டகச்சர் பிராஜக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 6**

12.10.2018ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| **தூய்மை இந்தியா திட்டம் 2018–19** | | | | |
| 1 | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அனகாபுத்தூர் நகராட்சிக்கு முதற்கட்ட சேகரிப்பு பணிக்கு 9 எண்ணம் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் சப்ளை செய்தல் பணி | 16.20 | மெசஸ்.இந்தியன் பிராஸ் மார்ட்<br>மெசஸ்.யூனிவர்செல் ஓவர்சீஸ் | 0.28 % குறைவு<br>0.56 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.7**

28.09.2018ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2018–19** | | | | |
| 1 | சிப்பம் – 1 தார் சாலை (வார்டு எண்.15,16,17) | 200.00 | திரு.எம்.ஞானவேல்<br>திரு.எம்.சக்தி வேல் | 4.41 % அதிகம்<br>6.23 % அதிகம் |
| 2. | சிப்பம் – 2 தார் சாலை மற்றும் சிமெண்ட் சாலை (வார்டு எண்.5,9,13) | 204.00 | மெசஸ்.எஸ்.பி பில்டார்ஸ்<br>திரு.யு.ஆர்.சுப்பிரமணியன் | 4.89 % அதிகம்<br>7.20 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | சிப்பம் – 3 தார் சாலை (வார்டு எண்.1,4,6) | 100.00 | மெசஸ்.யோகேஷ் கண்ஸ்ரக்சன்ஸ் திரு.எம்.சக்தி வேல் | 4.95 % அதிகம்<br><br>6.15 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி மதிப்பீட்டு தொகைக்கு கூடுதலாகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.8**

26.10.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | ஜார்ஜ் டவுன் பலநோக்கு தொழில் கூட்டுறவு சங்கம், எண்.9–அ, தேனாம்பேட்டை ராமசாமி தெரு, கொண்டிதோப்பு, சென்னை – 79. | அன்னை சிவகாமி மகளிர் தொழில் கூட்டுறவு சங்கம், எண்.1, முதல் லேன், அண்ணா பிள்ளை தெரு, சென்னை – 79. |
|---|---|---|---|
| | | (விலை ஒன்றுக்கு) | |
| 1. | சொத்து வரி சுய மதிப்பீட்டு படிவம்–1 (இளம் நீல நிறம்) | 3.00 | 3.50 |
| 2. | வணிக உபயோக கட்டிடம் படிவம்–2 (இளஞ்சிவப்பு நிறம்) | 3.00 | 3.50 |
| 3. | தொழிற்சாலை கட்டிடம் படிவம்–3 (வெள்ளை நிறம்) | 3.00 | 3.50 |
| 4. | வரி விதிப்பு கணக்கீட்டு படிவம் (X&Y) | 2.75 | 3.00 |
| 5. | அறிவிப்பு பிளக்ஸ் போர்டு (6 x 4) மல்டி கலர் உரிய பிரேமுடன் நிறுவுதுல் | 9.500.00 | 10.000.00 |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதியளிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.9**

26.10.2018ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | குடிநீர் விநியோக பணிக்கு தேவையான Hypo Liquid குளோரின் சப்ளை செய்தல் பணி | 9.80 | ராம் அசோசியேட்ஸ்<br>பி.வித்யா | 0.10 %குறைவு<br>1.20 %அதிகம் |

**அலுவலக குறிப்பு:** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.10**

இந்நகராட்சி எல்லைக்குட்பபட்ட பகுதிகளில் அமைந்துள்ள சுமார் 38.08 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழை நீர் கால்வாய் அமைக்கப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. வெள்ள நிவாரண முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கால்வாயில் உள்ள மண் அடைப்புகளை அகற்றி மழை நீர் தங்கு தடையின்றி செல்ல நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் கால்வாயில் உள்ள மண் அடைப்புகளை அகற்றிட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.11**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பபட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் பொது நிதியில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சமுதாய நலக்கூடம் உள்புறத்தில் பேவர் பிளாக் அமைத்தல் பணி | 5.50 |
| 2. | தென்றல் நகர் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலைகளை மறுசீரமைப்பு செய்தல் பணி | 5.00 |
| 3. | கௌரி அவென்யூ மற்றும் லஷ்மி நகர் பகுதிகளில் (கூடுதலாக) குப்பைகள் உருவாகும் இடத்தில் உரம் தயாரித்தல் பணி (Onsite Compost Centre) | 3.00 |
| 4. | நகராட்சி அலுவலக கட்டிட மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 5.00 |
| 5. | சாமுண்டீஸ்வரி நகர், கௌரி அவென்யூ, அண்ணா நகர் மெயின் ரோடு மற்றும் மூர்த்தி நகர் பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணி (Water ATM) ஆழ்துளை கிணறு, மின் இணைப்பு மற்றும் பைப்லைன் அமைத்தல் பணி | 9.80 |
| 6. | பஜார் தெரு (சமுதாய கூடம் அருகில்), சண்முக முதலி தெரு (கல்மடுவு அருகில்), அயோத்தியம்மன் கோயில் தெரு பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணி (Water ATM) ஆழ்துளை கிணறு, மின் | 7.50 |

| | | |
|---|---|---|
| | இணைப்பு மற்றும் பைப்லைன் அமைத்தல் பணி | |
| 7. | காமராஜபுரம் (மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி), கே.கே.ஷா தெரு, அனகாபுத்தூர் பஸ் நிலையம் பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணி (Water ATM) ஆழ்துளை கிணறு, மின் இணைப்பு மற்றும் பைப்லைன் அமைத்தல் பணி | 7.50 |
| 8. | கலைவாணர் தெரு, தென்றல் நகர் சிலப்பதிகாரம் தெரு பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணி (Water ATM) ஆழ்துளை கிணறு, மின் இணைப்பு மற்றும் பைப்லைன் அமைத்தல் பணி | 5.00 |
| 9. | சமுதாய நலக்கூடத்திற்கு 62.5 KVA ஜெனரேட்டர் அமைத்தல் பணி | 7.50 |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண்.12</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பபட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அம்மா உணவகத்தில் சிசிடிவி கேமரா பொருத்ததுல் பணி | 0.60 |
| 2. | நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஏசிகளுக்கு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 0.80 |
| 3. | நகராட்சி பகுதியில் அமைந்துள்ள பசுமை உரக்குடில் மற்றும் எரிவாயு தகன மேடைக்கு பைப் பொருத்ததுல் பணி | 1.00 |
| 4. | காமராஜபுரம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து திருநீர்மலை சாலை வரை 8 அங்குலம் சிஐ பைப் மற்றும் வால்வு பொருத்துதல் பணி | 3.00 |
| 5. | நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள சோலார் கூரைக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 1.20 |
| 6. | வார்டு எண்17ல் உள்ள உயர் கோபுர மின் விளக்கினை வார்டு எண்.15ல் பசுமை உரக்குடில் அருகில் மாற்றி மற்றும் எல்.இ.டி விளக்குகள் பொருத்துதல் பணி | 1.10 |
| 7. | நகராட்சி பகுதியில் உள்ள தெரு விளக்குகளுக்கு 20 எண்ணம் டைமர் ஆன் / ஆப் சுவீட்ச் பொருத்ததுல் பணி | 2.50 |
| 8. | நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து பணியாளர்களுக்கும் வருகை பதிவேடு எடுக்க பையோ மெட்ரிக் இயந்திரம் பொருத்ததுல் பணி | 0.25 |
| 9. | பசுமை உரக்குடில் 2ல் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல் பணி | 3.20 |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண்.13</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கீழ்க்கண்ட பொருட்களை வாங்கிடவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கொசு புழுக்கள் இல்லா இல்லம் என அறிவிக்க ஸ்மைலி ஸ்டிக்கர் (Smiley Stickers) | 10000 |
| 2. | பிளாஸ்டிக் விழிப்புணர்வு மல்டிகலர் நோட்டீஸ் | 15000 |
| 3. | மூவிதழ் இரசீது(Challan) | 10 புத்தகம் |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.14</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் பணிகள் விவரங்களை மாவட்ட மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலரிலும், தினசரி நாளிதழிகளில் விளம்பரம் செய்வதற்கான தோராய செலவினம் ரூ.5,00,000/—க்கு கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** கூட்டம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.15</u>**

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் 2017—18 ஆர்.ஓ.சி.எண்.4235/2018/பி3 நாள்.07.02.2018ல் அனகாபுத்தூர் நகராட்சியில் தினந்தோறும் சேகரமாகும் குப்பைகளில் மக்கும் குப்பைகள் தனியாக பிரித்து பசுமை உரக்குடில் மூலம் உரம் தயாரிக்கும் பணி 2 இடங்களில் மேற்கொள்ள ரூ.95.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கல்மடுவு பகுதியில் 5 MT கொள்ளளவு திறன் கொண்ட நுண் உரம் செயலாக்கமையம் அமைத்தல் | 49.00 |
| 2 | கஸ்தூரி பாய் நகர் அருகில் 3 MT கொள்ளளவு திறன் கொண்ட நுண் உரம் செயலாக்கமையம் அமைத்தல் | 46.00 |

மேற்கண்ட 2 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி 03.10.2017ல் பணி உத்திரவு ஆர்.பி.கண்ஸ்டரக்சன்ஸ் நிறுனத்திற்கு வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரர் பணி மேற்கொள்ளப்பட்டு பகுதி தொகை வழங்கப்பட்டது. மேற்படி வரிசை எண்.2ல் உள்ள பணியினை நகராட்சி நிர்வாக மண்டல

செயற்பொறியாளர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது பசுமை உரக்குடில் கட்டிடத்திற்கு செல்லும் அணுகு சாலை வாகன போக்குவரத்து ஏற்றதாக இல்லை என்றும், மேற்படி பணியில் மீதத்தொகையில் அணுகு சாலை அமைத்து கொள்ள அறிவுரை கோரப்பட்டதில், உரிய அனுமதி மன்றத்தில் பெற்று சாலை அமைத்து கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி அணுகு சாலை அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.6.00 இலட்சம், இச்செலவினத் தொகை மதிப்பீட்டுக்குள் வருவதாலும் இப்பணியினை அதே ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்ததாரர் வழங்கிய விலை விகிதத்தின் அடிப்படையில் அணுகு சாலை அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி பணி திட்ட பணி என்பதால் அணுகு சாலையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு செலவினத் தொகை மதிப்பீட்டிற்குள் வருவதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.16</u>**

டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேற்படி ஆய்வுக் கூட்டத்தில், கொசு ஒழிப்பு மருந்துகள் போதிய அளவில் இருப்பு வைத்துக்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டன. தற்போது பொது சுகாதாரப் பிரிவில், கொசு ஒழிப்பு மருந்துகள் இருப்பில் குறைவாக உள்ளதால், கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியினை தீவிரப்படுத்த பைரித்திரம் 2% என்ற புகைமருந்து 200 லிட்டரும், பெந்தியான் 82.5% 200 லிட்டர் பொது மேலாளர், தமிழ்நாடு மெடிக்கல் சர்வீசஸ் கார்ப்பரேசன் லிமிடெட், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவு ரூ.5.90 இலட்சம் ஆகும்.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>** பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.17</u>**

அனகாபுத்தூர் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாகும். 2011ம் ஆண்டு மக்கட் தெகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள்தொகை 48050 ஆகும். சென்னை மாநகராட்சி பகுதியினை ஒட்டி 18 வார்டுகளுடன், 4.00 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட வளர்ச்சி அடைந்து வரும் நகராட்சியாகும். மேலும், மொத்தம் 55.03 கி.மீ நீளமுள்ள சாலைகள் மற்றும் 38.08 கி.மீ நீளமுள்ள மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ள நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதார பணிகளை மேற்கொள்ள 21 துப்புரவு பணியாளர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. துப்புரவு மேற்பார்வைாளர் பணியிடம் ஒன்று, துப்புரவு ஆய்வர் பணியிடம் ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 120 நபர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 05 அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 2016–17, 2017–18ம் ஆண்டு முடிவுபெற்று, 2018–19 மூன்றாம் ஆண்டு பணி நடைபெற்று வருகிறது. அரசாணை (நிலை) எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ல், அளவுகோலின்படி 198 துப்புரவு பணியாளர்கள் தேவையாக உள்ளது. ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட 21 பணியிடங்களில் 1 துப்புரவு பணியாளர் மாற்றலாகி சென்றார் மற்றும் 1 துப்புரவு பணியாளர் இறந்து விட்டதால் 19 துப்புரவு பணியாளர்களே உள்ளனர். ஆகையால் 19 மற்றும் 120 ஒப்பந்த பணியாளர்கள் போக கூடுதலாக 59 துப்புரவு பணியிடங்கள் தேவைப்படுகிறது.

எனவே, பொது சுகாதார பணிகளையும் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளையும் சிறப்பாக செயல்படுத்திட ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள 21 பணியிடங்களில் 1 துப்புரவு பணியாளர் மாற்றலாகி சென்றார் மற்றும் 1 துப்புரவு பணியாளர் இறந்து விட்டதால் 19 துப்புரவு பணியாளர்களை தவிர்த்து, 179 பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் 2019–20ம் ஆண்டிற்கு தனியார் மூலம் (On Outsourcing Basis) நிரப்பவும் அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, 20 துப்புரவு பணியாளர்களுக்கு ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டும். இந்நகராட்சியில் இது நாள் வரை ஒரு துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடம் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக துப்புரவு பணியாளர்களின் பணியினை மேற்பார்வை செய்ய இயலவில்லை. எனவே, ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்க அனுமதி கோரப்பட்டுள்ள பணியிடங்களை சேர்த்து, 179 துப்புரவு பணியாளர்கள் மற்றும் இவர்களது பணியினை மேற்பார்வை செய்ய 9 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் தேவைப்படுகிள்றனர். எனவே 179 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 9 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் (On Outsourcing Basis) நிரப்பவும் அதற்கான செலவினம் ஆண்றொன்றுக்கு ரூ.325.00 இலட்சம் ஆகும். ஏனவே திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் சிறப்பாக செயல்பட துப்புரவு பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி கொள்ள அதற்கான உரிய பிரேரனையை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 05 அவர்களுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் சிறப்பாக செயல்படுத்திட தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 179 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 9 துப்புரவு பணி மேற்பார்வையாளர்களை அமர்த்தி கொள்ளவும் மற்றும் செலவினத்திற்கும் நிர்வாக அனுமதி பெற அதற்கான உரிய பிரேரனையை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 05 அவர்களுக்கு அனுப்புவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.18</u>

தெருவோர வியாபாரிகள் ( வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் தெருவில் வியாபாரம் செய்வதை ஒழுங்குப்படுத்துதல் சட்டம் 2015 என்ற சட்டம் தெருவோர வியாபரிகளின் உரிமையினை பாதுகாத்திட சட்டம் இயற்றப்பட்டுள்ளது. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தெருவோர வியாபாரிகளுக்கு உதவி செய்யும் வகையில் செயலாக்க விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அனகாபுத்தூர் நகராட்சி எல்லாலைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு செய்யப்பட்டது. கணக்கெடுப்பின்படி கீழ்கண்ட பகுதிகளில் தெருவோர வியாபாரிகள் உள்ளன என கண்டறியப்பட்டுள்ளது.

| வ. எண். | தெருவின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காமராஜர் சாலை ( சிவன் கோவில் அருகில் ) | 1 |
| 2 | காமராஜர் சாலை அருண்மதி திரையரங்கம் அருகில் ) | 1 |
| 3 | காமராஜர் சாலை (லேபர் பள்ளி தெரு சந்திப்பு ) | 1 |
| 4 | பஜார் தெரு மற்றும் கோபால் செட்டி தெரு | 21 |
| 5 | சன்னதி தெரு | 2 |
| 6 | சண்முக முதலி தெரு | 1 |
| 7 | தேவராஜ் நகர் | 1 |
| 8 | அயோத்தியம்மன் கோயில் தெரு | 2 |
| 9 | கன்னியம்மன் கோயில் தெரு | 3 |
| 10 | அம்மா உணவகம் அருகில் (ஜெ.என். ரோடு ) | 1 |
| 11 | தாய் மூகாம்பிகை நகர் | 1 |
| 12 | ஜெ.என்ரோடு, (பேருந்து நிலையம் அருகில் ) | 1 |
| 13 | ஜெ.என்ரோடு, (காமாட்சி நகர் தெரு சந்திப்பு ) | 4 |
| | **மொத்தம்** | **40** |

மேற்கண்ட இடங்களில் வ.எண்.4 முதல் 9 மற்றும் 11 ஆகியவை நகராட்சி பராமரிப்பில் உள்ள தெருக்கள் ஆகும். வ.எண்.1 முதல் 3, மற்றும் 10 முதல் 13 வரை உள்ள சாலைகள் நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் உள்ள சாலையாகும். வரிசை எண்.4ல் உள்ள தெருவில் மட்டும் அதிகபட்சமாக 21 வியாபாரிகள் உள்ளன. செயல்படுத்தும் வழிமுறைகளில் 4.10 ன்படி வியாபாரிகளுக்கு அடிப்படை வசதிகளான பிளாட்பாரம் (Pavement ) , குடிநீர் வசதி, கழிவறை , குப்பை அற்புறப்படுத்தும் வசதி, விளக்கு, பொது சேமரிப்பு இடம், வியாபாரத்திற்கு ஏற்ப சிறப்பு வசதிகளுடன் கூடிய வண்டி (Specialized carts), வாகன நிறுத்தம் வசதிகள் செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

வ.எண்.4ல் கண்டுள்ள தெருவில் மட்டும் அதிகபடியாக 21 வியாபாரிகள் உள்ளனர், மேற்படி தெருவானது அகலம் குறைவாக உள்ள தெரு மட்டும் இல்லாமல், தெருவின் இருபுறமும் தனியார் கட்டிடங்களின் கடைகள் தொடர்ச்சியாக உள்ளன. தனியார் கட்டிடகளில் கடைகளுக்கு மேற்படி தெரு அனுகுபாதையாக உள்ளது.

தெருவோர வியாபாரிகள் தற்போது கடைகளின் முன்பகுதியில் தெருவில் கடைவைத்து வியாபரம் செய்து வருகின்றனர். காலை 7.00 மணி முதல் 12 .00 மணிவரையும், பின்பு மாலை 3.30 முதல் 8.00 மணி வரையிலும் வியபாரம் செய்து வருகின்றனர். மேற்படி தெருவில் செயல்முறை வழிகாட்டியில் குறிப்பிட்டுள்ளபடி

தெருவில் அகலம் குறைவாக உள்ளதால் Pavement அமைக்க இயலாது தெருவில் தெருவிளக்கு வசதி உள்ளது. தெருவிலிருந்து 100 மீட்டர் துரத்தில் பொது கழிவறை உள்ளது. மற்ற தெருக்களில் ஒன்று அல்லது இரண்டு எண்ணிக்கை கொண்ட வியாபாரிகள் மட்டுமே உள்ளதால் அவர்களுக்கு என தனி தனியாக அடிப்படை வசதிகள் செய்யும் பட்சத்தில் அதிகமான நிதி செலவினம் ஏற்படும் . மேலும் மாநில நெடுஞ்சாலை பராமரிப்பில் உள்ள சாலைகள் போக்குவரத்து நிறைந்த இருவழிப்பாதை ( Two way ) யாக உள்ளது. அந்த சாலை பல்லாவரம் முதல் பூந்தமல்லி செல்லும் பிரதான சாலையாக உள்ளதாலும் எப்போதும் போக்குவரத்து நெரிசல் இருந்து வருகிறது மற்றும் விபத்துக்களும் எற்பட வாய்ப்பு உள்ளது. அகலம் குறைவாக உள்ளதல் அங்கு வியாபாரிகளுக்கு மேற்கண்ட காதணத்தினால் அடிப்படை வசதிகள் செய்ய இயலாது.

எனவே இந்நகராட்சியில் தெருவோர வியாபாரிகளுக்கு மேற்படி திட்டதின்கீழ் அடிப்படை வசதிகள் செய்து தர இயலாது நிலை உள்ளதால் விரிவான திட்ட செயலாக்கத்திலிருந்து இந்நகராட்சியினை விடுவிக்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம் சென்னை –5 அவர்களுக்கு தெரிவிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.964/2016/எப்1)

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி